# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009
## HELD IN AUGUST – 2009

## TML 3.12 - PRESCRIBED TEXT - II

முதலாவது வினா உட்பட, எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. மேல்வரும் பாடற்பகுதிகளுள் எவையேனும் இரண்டின் பொருளினைத் தற்கால உரைநடையில் எழுதி, அவற்றில் தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள அடிகளில் நீர்காணும் நயத்தையும் விபரிக்குக.

அ) அளி நிலை பொறாஅது அமரிய முகத்தள்,
விளி நிலை கொள்ளாள், தமியள், மென் மெல
நலம் மிகு சேவடி நிலம் வடுக் கொளாஅ
குறுக வந்து, தன் கூர் எயிறு தோன்ற
வறிது அகத்து எழுந்த வாய் அல் முறுவலள்,
கண்ணியது உணரா அளவை, ஒண்ணுதல்,
வினை தலைப்படுதல் செல்லா நினைவுடன் -
முளிந்த ஓமை முதையல் அம் காட்டு,
பளிங்கத்து அன்ன பல் காய் நெல்லி,
மோட்டு இரும் பாறை, ஈட்டு வட்டு ஏய்ப்ப,
உதிர்வன படுஉம் கதிர் தெறு கவாஅன்,
மாய்த்த போல மழுகு நுனை தோற்றி,
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங் கல்,
விரல் நுதி சிதைக்கும் நிரை நிலை அதர,
பரல் முரம்பு ஆகிய பயம் இல், கானம்
இறப்ப எண்ணுதிர் ஆயின் - அறத்தாறு
அன்று'' என மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன ஆக' என்னுநள் போல,
<u>முன்னம் காட்டி, முகத்தின் உரையா,</u>
<u>ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஓற்றி,</u>
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு,
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன் தலைத்
தூ நீர் பயந்த துணை அமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை, மா மலர்
மணி உரு இழந்த அணி அழி தோற்றம்
கண்டே கடிந்தனம், செலவே – ஒண்டொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள்மாதோ, பிரிதும் நாம் எனினே!

(தொடர்.........2ல்)

ஆ) வழிபடு வோரை வல்லறி தீயே
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி
வந்தடி பொருந்தி முந்தை நிற்பிற்
றண்டமுந் தணிதிநீ பண்டையிற் பெரிதே
அமிழ்தட் டானாக் கமழ்குய் யடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
<u>மகளிர் மலைத்த லல்லது மன்னர்</u>
<u>மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப</u>
செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்
நெய்தலங் கான னெடியோய்
எய்தவந் தனம்யா மேத்துகம் பலவே.

இ) வடவர் தந்த வான் கேழ் வட்டம்
தென்புல மருங்கில் சாந்தொடு துறப்ப,
கூந்தல், மகளிர் கோதை புனையார்,
பல் இருங் கூந்தல் சில்மலர் பெய்ம்மார்,
தண் நறுந் தகர முளரி நெருப்பு அமைத்து,

இருங்காழ் அகிலொடு வெள் அயிர் புகைப்ப,
கைவல் கம்மியன் கவின் பெறப் புனைந்த
செய்கேழ் வட்டம் சுருக்கி; கொடுந்தறி
சிலம்பி வால் நூல் வலந்தன தூங்க;
வான் உற நிவந்த மேல் நிலை மருங்கின்,

வேனில் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர் வாய்க் கட்டளை திரியாது, திண் நிலைப்
போர் வாய்க் கதவம் தாழொடு துறப்ப;
கல்லென் துவலை தூவலின், யாவரும்
தொகுவாய்க் கன்னல் தண்ணீர் உண்ணார்.

பகுவாய்த் தடவில் செந்நெருப்பு ஆர;
ஆடல் மகளிர் பாடல்கொளப் புணர்மார்,
தண்மையின் திரிந்த இன்குரல் தீம் தொடை,
கொம்மை வருமுலை வெம்மையில் தடைஇ,
கருங் கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப;

<u>காதலர்ப் பிரிந்தோர் புலம்ப, பெயல் கனைந்து</u>
<u>கூதிர் நின்றன்றால்</u>

(தொடர்.........3ல்)

02. அகநானூற்றுப் பாலைத்திணைப் பாடல்களில் தலைவன் தலைவியரின் பிரிவுத்துன்பத்துக்கூடாக அவர்களது அன்புணர்வு வெளிப்படுமாற்றைத் தெளிவு படுத்துக.

03. புறநானூற்றுப் பாடல்களின் அடிப்படையில் சங்ககாலப் புலவர்கள் - புரவலர்களுக் கிடையில் நிலவிய உறவின் தன்மையைத் தெளிவுறுத்துக.

04. அ) நெடுதல் வாடையின் உள்ளடக்கத்தைச் சுருக்கமாக விளக்குக.

ஆ) நெடுநல்வாடை அகத்திணை சார்ந்ததா? புறத்திணைச் சார்ந்ததா? என்பது பற்றி நிலவும் வாதப்பிரதிவாதங்களை முன்வைத்து, அது தொடர்பான உமது நிலைப்பாட்டையும் தெளிவுறுத்துக.

05. கலங்கத்துப்பரணி போர்பாடியது பகுதியில் காணப்படும் வர்ணனைச் சிறப்பினை விபரிக்குக.

06. அமைச்சன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய தகுதிப்பாடுகள் குறித்து வள்ளுவர் கூறுவனவற்றையும் அவற்றை எடுத்துரைக்குமாற்றிலுள்ள சிறப்பையும் தெளிவுறுத்துக.

07. "திருவாசகப் பாடல்கள் மாணிக்கவாசகரின் பக்தி உணர்வையும் கவித்துவத்தையும் ஒருசேரப் புலப்படுத்துவனவாக அமைந்துள்ளன." ஆராய்க.

08. குற்றாலக் குறவஞ்சியின் நாடகத் தன்மையையும் பிற அழகியல் அம்சங்களையும் எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குக.

*****